DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 512/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜேந்திரன் |
| Father / Husband Name | வீராசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 02.06.2026

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது கல்பாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இதற்கு முன் கடந்த 16.02.2025 ம் தேதி மதுராந்தகம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் மாலை 6.15 மணிக்கு நானும் என்னுடன் காவல் மகாதேவன் மற்றும் காவலர் சதீஷ்குமார் ஆகியோருடன் மதுவிலக்கு தடுப்பு நடவடிக்கை சம்மந்தமாக ரோந்து பணியில் இருந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி கீழவளம் வேருந்து நிறுத்தம் அருகே ஆஜர் எதிரிகள் கோணிப்பையில் ஏதோ வைத்துக்கொண்டு எங்களை கண்டவுடன் ஓட முயன்றவரை தடுத்து சோதனை செய்தபோது அந்த கோணிப்பையில் 180ML அளவுகொண்ட சுமார் 48 Old Chef பிராந்தி மதுபாட்டில் மற்றும் ரூ.500/- மற்றும் TN 19 X 6761 என்ற TVS XL இருசக்கர வாகனம் இருந்தது.

2. மேற்படி எதிரிகளை விசாரித்தபோது மேற்படி மதுபாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக கூறினார். அரசு அனுமதியின்றி மதுபாட்டில்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த காரணத்திற்காக எதிரிகளை கைது செய்து பொது நபர்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் போலிஸ் சாட்சிகளான மகாதேவன் மற்றும் சதிஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் எதிரி குமாரிடமிருந்து 180ML அளவுகொண்ட சுமார் 48 Old Chef பிராந்தி மதுபாட்டில் மற்றும் ரூ.500/- ஆகியவற்றை 8.00 மணிக்கு கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். பின்னர் 8.15 மணிக்கு TN 19 X 6761 என்ற TVS XL இருசக்கர வாகனம் கைபற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். **(அந்த கைப்பற்றுதல் மகஜர்கள் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

3. பின்னர் எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண் 82/2025 ச/பி 4(1)(C), 4(1)(A) TNP Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் சாட்சிகள் மகாதேவன் மற்றும் சதிஷ்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம்

பதிவு செய்துதேன். பின்னர் வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(அந்த படிவங்கள் 91 முறையே அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. **(அந்த 180ML அளவுகொண்ட சுமார் 48 Old Chef பிராந்தி மதுபாட்டில் சா.பொ.1 ஆகவும் மற்றும் ரூ.500/- அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் வழக்கு விசாரணை முடித்து ச/பி ச/பி 4(1)(C), 4(1)(A) TNP Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துதேன்.

**குறுக்கு விசாரணை**

4. கீழவளம் பேருந்து நிறுத்தம் மக்கள் நடமாட்டமும், போக்குவரத்தும் நிரைந்த பகுதி என்றால் சரியல்ல. அது பேருந்து நிறுத்தம் என்பதால் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் இல்லை. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததும், புலன்விசாரணை செய்ததும் நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பொது மக்கள் சாட்சி யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான், அங்கு யாரும் இல்லை அதனால் விசாரிக்கவில்லை. பட்டியல் சாட்சிகள் 1 மற்றும் 2-ஐ எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கு எந்த பங்களிப்பும் இல்லை என்றாலும் சரியல்ல. புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.